**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12 ஆம் நாள் வியாழக்கிழமை

**இ.ம.எண்.16/2026, 17/2026 மற்றும் 18/2026**

**IN**

**அசல் வழக்கு எண்.237/2014**

1. பரமு அம்மாள் (இறந்தவர்)
2. சுவாமிநாதன்
3. கோமதிநாயகம் பாண்டியன்
4. முத்துக்குமார்
5. ராமையா (இறந்தவர்)
6. சென்பகராஜன் ... மனுதாரர்கள்/ வாதிகள்

/எதிர்/

1. கோட்டைச்சாமி
2. முத்துக்குமார்
3. கிருஷ்ணசாமி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுக்களானது 09.02.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சண்முகையா அவர்கள் ஆஜராகியும், மனுக்கள், எதிருரைகள் மற்றும் அசல் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுக்களில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.12 17:09:45 +0530

**<u>பொதுவான உத்தரவு</u>**

மனுதாரர்களால் இம்மனுக்களானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151, கட்டளை 18 விதி 17 மற்றும் கட்டளை 7 விதி 14(3) ஆகியவற்றின் கீழ், வாதிகள் தரப்பில் பதில் வழக்குரையில் கூறியுள்ள உபய தரப்பினர்களின் முன் ஆவணங்களான 15.10.1973 மற்றும் 15.04.1969 தேதிய பதிவு இரு கிரைய ஆவணங்களை வா.சா.1–ஐ மீண்டும் விசாரணை செய்து, மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்து கொள்ளும் வகைக்கு இவ்வழக்கினை மறுதிறவு செய்து, வா.சா.1–ஐ மீண்டும் அழைக்கக் கோரியும், இவ்வழக்கில் இதன் மனுவில் கண்டுள்ள ஆதரவுகளை முன்னமே தாக்கல் செய்யாத தவறுதலையும், காலதாமதத்தையும் மன்னித்து மேற்படி ஆதரவுகளை வாங்கி அங்கீகரித்துக்கொள்ள உத்தரவிடக் கோரியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

**<u>1) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.16/2026, 17/2026 மற்றும் 18/2026–ன் மனுக்களின் சுருக்கம்:–</u>**

இம்மனுக்களின் மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் என்றும், மனுதாரர்கள் இவ்வழக்கை 1ம் வாதிக்கு 5வது தபசில் சொத்தைப் பொறுத்தும், 2ம் வாதிக்கு 2வது தபசில் சொத்தை பொறுத்தும், 3ம் வாதிக்கு 3ம் தபசில் சொத்தை பொறுத்தும், 4ம் வாதிக்கு 4வது தபசில் சொத்தை பொறுத்தும், 5ம் வாதிக்கு 6வது தபசில் சொத்தை பொறுத்தும், 1ம் வாதிக்கு 7வது தபசில் சொத்தை பொறுத்தும் நிரந்தர ஏவுகட்டளை பரிகாரங்களும், 1ம் பிரதிவாதி பெற்ற 11.12.2008 தேதி மற்றும் 29.05.2009 தேதி மேலநீலிதநல்லூர் சார்பதிவக ஆவணங்களும், 2 மற்றும் 3 பிரதிவாதிகள் பெற்ற 27.11.2008 தேதிய மேலநீலிதநல்லூர் ஆவணங்கள் செல்லத்தக்கதில்லை எனவும் மற்றும் செலவுதொகைகள் கோரியும் பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்துள்ளதாகவும், இவ்வழக்கு வாதிகள் தரப்பில் வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள பதில் வழக்குரையில் 15.10.1973 தேதியில் தவசிக்கண்ணுத் தேவருக்கு வெங்கடாசலபதி நாயக்கர் எழுதிக்கொடுத்த பதிவு கிரைய ஆவணம் மற்றும் அதற்கு முந்தைய 15.04.1969 தேதிய

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.02.12 17:09:52 +0530

பதிவுக் கிரைய ஆவணம் ஆகிய இரு ஆவணங்களைப் பற்றி கூறியுள்ளதாகவும், மேற்படி ஆவணங்கள் மனுதாரர்களுக்கும், எதிர்மனுதாரர்களுக்கும், முந்தைய மூல ஆவணங்களாகும் என்றும், மேற்படி ஆவணங்களைப் பொறுத்து பி.வா.சா.1 சாட்சியிடம் மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணையில் கேள்விகேட்டபோது, அது பற்றி தனக்கு தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார் என்றும், மேற்படி ஆவணங்கள் மனுதாரர்கள் தரப்பு விசாரணைக்கு பின்பு மனுதாரர்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது என்றும், இவ்வழக்கை மனுதாரரின் தந்தை வழக்கறிஞரை சந்தித்து முதலில் நடத்தி வந்தார் என்றும், மேற்படி ஆவணங்களை முன்னமே தாக்கல் செய்யாதது வேண்டுமென்று ஏற்பட்டதில்லை என்றும், மனுதாரர்களை அறியாமல் தெய்வாதீனமாக ஏற்பட்டுவிட்டது என்றும், முன்னமே தாக்கல் செய்யாததை மன்னித்துக் கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கிறது என்றும், மேற்கூறிய முக்கிய இரு பதிவு கிரைய ஆவணங்களை நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்தால் மட்டுமே மனுதாரர்களின் கட்சியை இந்நீதிமன்றத்தில் நிரூபணம் செய்ய இயலும் என்றும், மேலும், இவ்வழக்கின் பிரச்சனைகளுக்கு இந்நீதிமன்றம் ஒரு நல்ல தீர்முடிவாக எடுக்க முடியும் என்றும், வாதிகள் நீதியின் பலனை அடைய முடியும் என்றும், ஆகையால், வாதிகள் தரப்பில் பதில் வழக்குரையில் கூறியுள்ள உபய தரப்பினர்களின் முன் ஆவணங்களான 15.10.1973 மற்றும் 15.04.1969 தேதிய பதிவு இரு கிரைய ஆவணங்களை வா.சா.1–ஐ மீண்டும் விசாரணை செய்து, மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்து கொள்ளும் வகைக்கு இவ்வழக்கினை மறுதிறவு செய்து, வா.சா.1–ஐ மீண்டும் அழைக்கக் கோரியும், இவ்வழக்கில் இதன் மனுவில் கண்டுள்ள ஆதரவுகளை முன்னமே தாக்கல் செய்யாத தவறுதலையும், காலதாமதத்தையும் மன்னித்து மேற்படி ஆதரவுகளை வாங்கி அங்கீகரித்துக்கொள்ள உத்தரவிடக் கோரியும் இம்மனுக்கள் மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2) **<u>3ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 1, 2 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரைகளின் சுருக்கம்:–</u>**

மனுதாரர்களின் மனுக்கள் சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.12 17:10:00 +0530

செல்லத்தக்கதல்ல என்றும், உபயவாதிகள் தரப்பில் விசாரணை முடிவுற்று வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும், வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலமையில் பிரதான வழக்கை காலம்கடத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலேயே இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், ஏற்கனவே 3ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, பி.வா.சா.ஆ.1 முதல் 4 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை செய்வதற்காக சுமார் 30 வாய்தாக்கள் மனுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், பி.வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக சுமார் 2 ஆண்டு காலம் மனுதாரர்கள் தரப்பில் வாய்தாக்கள் பெறப்பட்டு அதன்பின்னர் 1ம் வாதி மற்றும் 5ம் வாதியின் இறப்பிற்கு தவறுதலாக மனு தாக்கல் செய்து மேற்படி மனுவையும் இந்நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது என்றும், அதன்பின்னர் 6ம் மனுதாரரை கட்சியாக சேர்ப்பதற்கு மனு தாக்கல் செய்து இந்நீதிமன்றத்தில் மனுதாரர்கள் வழக்கு நடத்தி வந்தார்கள் என்றும், மேற்படி வழக்கு இந்நீதிமன்றத்தில் "Target Case" வழக்காக இருந்து வருகிறது என்றும், இந்த மனுதாரர்கள் இவ்வழக்கை தாக்கல்செய்து சுமார் 12 ஆண்டுகளுக்கு மேலாக இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருவதுடன் ஒவ்வொரு மனுக்களாக காலம் கடந்து தாக்கல் செய்து வருகின்றார்கள் என்றும், இந்த மனுதாரர்களுக்கு இம்மனுவை தாக்கல் செய்வதற்கு எவ்விதமான சட்டப்படியான உரிமையும் கிடையாது, சட்ட அனுமதியும் கிடையாது என்றும், இந்த பிரதிவாதிகள் தரப்பில் வாதிகள் தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்து பிரதிவாதிகளுக்கு சாதகமாக குறுக்கு விசாரணையில் அனேகமான சாட்சியம் பெறப்பட்டுள்ளது என்றும், மேற்படி சாட்சியத்தை அழிக்கும் முகமாக இந்த வாதிகள் பொய்யான காரணங்களை கூறி இவ்வழக்கை மேல்நடத்தவிடாமல் காலம் கடத்தவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வம்பு மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், வாதிகள் தாக்கல் செய்துள்ள பிராதில் சொல்லப்படாத ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், 15.10.1973 தேதியில் தவசிக்கண்ணுத்தேவருக்கு வெங்கடாசலபதி நாயக்கர் எழுதிக்கொடுத்த பதிவு கிரைய ஆவணம் மற்றும் 15.04.1969 தேதிய பதிவு கிரைய

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.12 17:10:08 +0530

ஆவணங்களைப் பற்றி பி.வா.சா.1 சாட்சியிடம் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்போது மேற்படி ஆவணங்களைப் பற்றி தனக்கு தெரியாது என்று கூறிவிட்டார் என்றும், மேற்படி இரண்டு ஆவணங்களைப் பற்றியும் வாதிகளுக்கு நன்கு தெரிந்திருந்தும் இந்த வாதிகள் வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றும், 15.10.1973 தேதிய கிரைய ஆவணமான தவசிக்கண்ணுத் தேவருக்கு வெங்கடாசலபதி நாயக்கர் எழுதிக் கொடுத்த பதிவு கிரைய ஆவணத்தின் அசலை தற்போது தாக்கல்செய்வதற்கு வாதிகள் எந்த ஒரு காரணங்களும் கூறவில்லை என்றும், மேற்படி அசல் ஆவணம் வாதிகளின் கைவசமே இருந்து வந்துள்ளது என்றும், மேற்படி இரண்டு ஆவணங்களும் இந்த வாதிகளின் வழக்கிற்கு ஏற்றார்போல் காலம் கடந்து தற்போது தாக்கல் செய்துள்ளனர் என்றும், மேற்படி ஆவணங்களை வாதிகள் தாக்கல்செய்துள்ள பிராதில் குறிப்பிடவே இல்லை என்றும், மேற்படி ஆவணங்களையும் குறியீடு செய்ய இயலாது என்றும், வாதிகள் பிராதுடன் தாக்கல்செய்துள்ள ஆவணங்களுக்கு மாறாக தற்சமயம் வாதிகள் மேற்படி இரண்டு ஆவணங்களையும் தாக்கல் செய்ய இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மேற்படி ஆவணங்களும் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்களாகும் என்றும், பிரதான வழக்கில் இந்த எதிர்மனுதாரர்களுக்கு நல்ல கட்சி உள்ளது என்பதை தெரிந்துகொண்டு மனுதாரர்கள் இந்நீதிமன்றத்தை ஏமாற்றும் செயலாக ஒன்றன்பின் ஒன்றாக ஒவ்வொரு மனுவாக தாக்கல் செய்து வருகின்றனர் என்றும், வா.சா.1 ஐ மீண்டும் விசாரணை செய்ய எந்த ஒரு முகாந்திரமும் கிடையாது என்றும், ஏற்கனவே வா.சா.1 இந்நீதிமன்றத்தில் ஆஜராகி முழுமையான விசாரணையை முடித்துள்ளார் என்றும், தற்போது வா.சா.1 ஐ மீண்டும் விசாரணை செய்ய கோருவது இந்நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்கும் செயலாகும் என்றும், எனவே, இம்மனுக்களானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுக்களானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.12 17:10:16 +0530

4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரைகள், அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) அசல் வழக்கானது வாதிகளால் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் விளம்புகை பரிகாரங்கள் கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) அசல் வழக்கானது தற்போது வாதுரைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனுக்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

7) மனுதாரர்களால் இ.ம.எண்.18/2026 மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் காலதாமதமாக தற்பொழுது வழக்கு விசாரணை முடிந்து வாத உரைக்காக ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது. மேற்படி ஆவணங்களை வழக்கு விசாரணையின்போது தாக்கல் செய்யாததற்கு தகுந்த காரணங்கள் மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவில் தெரிவிக்கப்படவில்லை.

8) மேலும், இம்மனுக்களின் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலமையில் பிரதான வழக்கை காலம்கடத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலேயே இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மேற்படி ஆவணங்களை வாதிகள் தாக்கல்செய்துள்ள பிராதில் குறிப்பிடவே இல்லை என்றும், மேற்படி ஆவணங்களையும் குறியீடு செய்ய இயலாது என்றும், வாதிகள் பிராதுடன் தாக்கல்செய்துள்ள ஆவணங்களுக்கு மாறாக தற்சமயம் வாதிகள் மேற்படி இரண்டு ஆவணங்களையும் தாக்கல் செய்ய இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மேற்படி ஆவணங்களும் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்களாகும்

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.02.12 17:10:25 +0530

என்றும், பிரதான வழக்கில் இந்த எதிர்மனுதாரர்களுக்கு நல்ல கட்சி உள்ளது என்பதை தெரிந்துகொண்டு மனுதாரர்கள் இந்நீதிமன்றத்தை ஏமாற்றும் செயலாக ஒன்றன்பின் ஒன்றாக ஒவ்வொரு மனுவாக தாக்கல் செய்து வருகின்றனர் என்றும், வா.சா.1 ஐ மீண்டும் விசாரணை செய்ய எந்த ஒரு முகாந்திரமும் கிடையாது என்று இம்மனுக்களுக்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

9) இருப்பினும், அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் மனுதாரர்களால் இ.ம.எண்.18/2026 உடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அசல் வழக்கின் சிறந்த நீதிமுறை தீர்மானிப்பிற்கு அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

10) ஆகையால், அசல் வழக்கானது மறுதிறவு செய்யப்பட்டு, வா.சா.1–ஐ திரும்ப அழைக்க அனுமதித்து, மனுதாரர்கள் தரப்பில் இ.ம.எண்.18/2026 மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் நிரூபணம் மற்றும் தொடர்புடைமைக்குட்பட்டு இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

11) மேலும், மேற்கண்ட பரிசீலனையிலிருந்து மனுதாரர்களால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட கஷ்ட, நஷ்டங்களை கருத்தில்கொண்டு, இம்மனுக்களானது நீதியின் நலன் கருதி நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படத்தக்கது என்று இம்மனுக்களுக்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

**<u>12) இறுதியாக</u>**

**<u>இ.ம.எண்.16/2026</u>**

இம்மனுவானது ரூ.1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை எதிர்மனுதாரர்களுக்கு நேரடியாக 16.02.2026 ம் தேதிக்குள்

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.12 17:10:36 +0530

செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 16.02.2026.

**இ.ம.எண்.17/2026**

இம்மனுவானது ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை எதிர்மனுதாரர்களுக்கு நேரடியாக 16.02.2026 ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 16.02.2026.

**இ.ம.எண்.18/2026**

இம்மனுவானது ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை எதிர்மனுதாரர்களுக்கு நேரடியாக 16.02.2026 ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 16.02.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.12 17:10:44 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** :- - இல்லை -

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.12 17:10:50 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**மு.மா.உ. நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்,**

I.A.No.16/2026,
I.A.No.17/2026 and
I.A.No.18/2026
in
O.S.No.237/2014
**உத்தரவு (Draft / Fair)**
**நாள் : 12.02.2026**